



க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,


சேகுத்தம்பிப் புலவரின்...

"காரணமாலை"

(திருமக்க நாட்டின் சிறப்பு, மகிமை கூறும் பகுதி)








தமிழ்

தொகுப்பு..

ஆசிரியர்: திரு. இ. அநூஷன்[National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)

காரணமாலை



சீறா சரிதத்தை இசைத்தமிழால் பாடப்பட்ட நூல் **"காரண மாலை"** ஆகும். **இஸ்லாமிய அற்புதச் செயல்களைக்** (மு.்.கிஸாத்துக்கள்) **காரணங்கள்** என்று அழைக்கப்படுவதுண்டு. **அற்புதச் செயல்களாகிய (காரணங்களாகிய) மலர்களாலான மாலை** என்ற பொருளில், இந்நூலுக்குக் "காரணமாலை" என்னும் பெயர் வழங்குவதாயிற்று எனக் கருதலாம். **கி.பி 1878 ஆம் ஆண்டு ஜூன்** மாதம் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலினை அச்சிட்ட வரலாறு 154 அடிகளாலான ஆசிரியப் பாவினால் நூலின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. **இந்நூலானது நாடகவடிவில்**, உருவாக்கப்பட்டதால் **"சீறா நாடகம்"** எனவும் அழைக்கப்படும். **நீண்டதும் சிறியதுமான 263 இசைப் பாடல்கள்** நூலில் காணப்படுகின்றன. **காப்பு, கடவுள் வாழ்த்து ஆகியவற்றுடன் நபிகள் நாயகம் பூர்வீகத்திலுண்டான சிறப்பு** முதலாக வாழிச்சிறப்புஈராக **26 தலைப்புக்களின்** கீழ் இசைப்பாடல்கள் இராகம், தாளம் என்பவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. **கலித்துறை, சகம், கொச்சகக் கலிப்பா, அகவல், வெண்பா, விருத்தம், தரு அல்லது கண்ணி,** ஆகிய செய்யுள் யாப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எளிமையும், பொருண்மையும் நிறைந்த பாடல்கள் இஸ்லாமிய மரபின் அடியொற்றியவையாகவும், இறை நம்பிக்கையை ஊட்டுவனவாகவும் மிளிர்கின்றன. ஆசிரிய விருத்தங்களும் தருக்களும் நூலில் அதிகம் காணப்படுகின்றன. இசையோடிணைந்த வரலாறுகளாகையால் படிக்குந்தோறும் இன்பமூட்டுவதாய் விளங்குகிறது. **பூபாளம், மோகனம், நாட்டை, கல்யாணி, ஆனந்த பைரவி உட்பட 20 இராகங்களில் பாடல்கள்** இயற்றப்பட்டுள்ளன. இந்நூல் **யாழ்ப்பாண நகரில் கற்றோர் முன்னிலையில் அரங்கேற்றம்** செய்யப்பட்டதென்பதை நூலிலுள்ள பாடல் தெளிவாக்குகிறது.

ஏர்பெருகும் யாழ்ப்பாண நகரந்தன்னி
லேற்ற முள்ள தீனோர்க ளெவருங்கேட்பக்
கார்பெருங் கவிகைநபி யுல்லாதங்கள்
காரணமா மாலைதனைக் கருணைகூர்ந்து
சீர்பெருகப் படித்தரங்க மேற்றினோன்றான்
றிருநலஞ்சேர் சேகுத்தம்பி சிறப்பாய்நாளும்
பேர்பெருக வவற்குநபி தீனுள்ளோர்க்கும்
பெருமைநலம் புரிந்தருள்வாய்பிசகிலானே

காரணமாலை நூலினைப் படித்து, அதிலுள்ள **குறைகள் நீக்கிச் சரிபார்த்து தந்தவர் தமிழ்நாட்டின் காயல்பட்டணம் கண்குமது மகுதூம் பிள்ளை என்பவரின் குமாரராகிய மகுதூமுகம்மதுப் புலவரவர்கள்**. மேலும் நூல் வெளிவருவதற்கான பொருளுதவியைச் செய்தவர், தஞ்சாவூர் ஹக்கீம் - நக்கர் சாகிப் அவர்களின் குமாரி சேகப்துல் காதிறு சாகிப் அவர்கள். நூலானது சென்னை நகரில் கொ.மாணிக்க முதலியார் கம்பனியின் மனோன்மணி விலாச அச்சு கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

நூலாசிரியர் வரலாறு:

காரணமாலை என்னும் நூலினை இயற்றியவர் **யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த** சாமுனா லெப்பை என்பவரின் புதல்வர் **சேகுத்தம்பிப் புலவர்** ஆவார். இவர் இந்நூலினை எழுதி வெளியிட்ட காலத்தில்

காலி நகரில் வாழ்ந்தமையை நூல் குறிப்பிட்டுள்ளது. இவரின் தந்தையார் யாழ்ப்பாணத்தில் இருந்து வணிக நோக்கத்துடனோ அல்லது வேறு காரணத்தினாலோ காலியில் குடி வாழ்ந்திருக்கக்கூடும். அல்லது புலவர் தனித்தோ, மணம் முடித்து காலியில் வாழ்ந்திருக்கலாம். **இந்நூல் இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் (1878இல்) எழுந்தது**. எனவே புலவரது வாழ்வியல் கி.பி 19ஆம் நூற்றாண்டுக்குரியது. ஒருவேளை 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சில ஆண்டுகள் வாழ்ந்திருக்கக்கூடும். புலவரின் வரலாறு பற்றிய தகவல்கள் மிகவும் குறைவாக கிடைத்துள்ளன. தமிழகத்துடன் அருக்கு நெருங்கிய தொடர்பு இருந்துள்ளது. சதாவதானியாய்த் திகழ்ந்த சேய்குதம்பிப் புலவர் **தமிழறிவு, கர்நாடக இசை அறிவு, நாடக அறிவு** ஆகியவற்றில் சிறந்து காணப்பட்டுள்ளார். **கோடாற்றுப்பிள்ளைத்தமிழ், திருநாகூர்திரிபந்தாதி, நீதிவெண்பா** முதலான நூல்களையும் இயற்றியுள்ளார். யாழ்ப்பாணம், காலி, தமிழ்நாடு ஆகிய இடங்களுடன் வாழ்வியல் தொடர்பைப் பேணியுள்ளார். தமிழறிஞர்கள் அதிகமாய் வாழ்ந்த யாழ்ப்பாணத்தில் தமது காரணமாலை நூலினை அரங்கேற்றம் செய்துள்ளார்.



பாடப்பரப்பு:

காரணமாலை இசை நாடக நூலின் முக்கியமான **26 பிரிவுகளில் இரண்டாவதாக அமைந்த "திருமக்க நாட்டுச் சிறப்பு" என்னும் 15 பாடல்கள் கொண்ட பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 பாடல்கள்** மட்டும் பாடப்பரப்புக்குரியவை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவதரித்த **புனித மக்கா நகரின் இயற்கை அழகு, அங்கு தேவர்களால் அமைக்கப்பட்ட க.ஃபாவின்(பள்ளிவாசலின்) அருட் சிறப்பு, நபிகளின் பெருமை** ஆகியன இப்பாடல்களினூடு வெளிப்படுகின்றன. **ஒன்பது பாடல்கள் கொச்சகக் கலிப்பாவிலும், ஏனைய இரண்டு படல்களும் முறையே ஆசிரிய விருத்தம், எழுசீர் கழிநெடிலடி ஆகியவற்றிலும் அமைந்த இசைப் பாடல்**களாகும். இவற்றுக்கான இராக - தாளம். குறிப்பிடப்படவில்லை.

திருமக்க நாட்டின் மகிமை சொல்லத் தொடங்குதல்,

1. கருமுகில் தவழுஞ் சோலை நீழலிற் கலாப மாடும்
   வருநதி யிடங்க டோறும் வளைதர ளங்க னீனுந்
   திருமலி பணைக டோறுஞ் செய்யவண் டினங்கள் பாடு
   மருமலி மக்க நாட்டின் மகிமையிற் சிறிது சொல்வாம்

பொழிப்பு:

கரிய முகில்கள் படிகின்ற சோலை நிழலில் மயில்கள் ஆடும் நதியானது ஓடிவருகின்ற இடங்களிலெல்லாம் சங்குகள் முத்துக்களை ஈனும். செல்வம் கொழிக்கும் மருத நிலங்களில் எல்லாம் சிவந்த வண்டினங்கள் ரீங்கார இசையெழுப்பும். இவ்வாறான மலைகள் நிறைந்த திருமக்க நாட்டின் பெருமையில் சிறிதளவினை எடுத்துக் கூறுவோமாக.

தவமிகுதியுறு மக்கநாடு

2. மன்றல்செறி மனைவயின்சேர் மின்னனார்கள்,
மலர்க்குழலுக் கிடுதூபம் வளைந்து வான்போய்க்
கொண்டலென வேகவியச் சோலைதோறுங்
குவிந் துமயில் கிறுகிறெனக் கூடியாடு
முண்டகமா மலர்த்தடஞ்சூழ் பண்ணைதோறு
முழங்கிவளை தரளமணி முற்றியீனும்
அண்டர்நித மிறையருளால் வந்து கூடும்
அதிகதவ மிகுதியுறு மக்க நாடே!

பொழிப்பு:

நறிய வாசனை பரவியிருக்கும் இல்லங்களில் இருக்கின்ற மின்னலையொத்த இடையையுடைய பெண்கள், தங்கள் மலர் சூடிய கூந்தலைக் காயவைப்பதற்காக இட்டுக்கொண்ட நறுந்தூபப் புகையானது சுருண்டு மேலெழுந்து ஆகாயத்தை அடைந்து மேகம் என்று சொல்லத்தக்கதாக மூடிக்கொள்ள, அதுகண்ட சோலையிலுள்ள மயில்களெல்லாம் ஒருங்கு திரண்டு கிறுகிறுவென வேகமாக ஆடும். அழகான தாமரை மலர்களையுடைய பொய்கைகள் சூழ்ந்திருக்கும் வயல் நிலங்களிலெல்லாம் சூலுற்ற சங்குகள், சூல் முதிர்ந்து முத்து மணிகளைப் பிறப்பிக்கும். இறைவனது அருளினால் வானவர்கள் தினமும் வந்து குழுமுகின்ற, கூடுதலான தவஞ் செய்தலால் மேன்மையான பயனைப் பெற்று விளங்குவது மக்க நாடாகும்.

திருமக்க நாட்டின் சிறப்பு (3 - 11 வரை)

3. திங்கள் செங்கதி ரோடி விலகுந்
தினத்தினஞ் செய்ய வானவர் சூழுந்
தங்க மால்வரை யுச்சியின் மீது
தவழ்ந் தெழிலி மழையைப் பொழியுங்
கொங்கு லாவிய சோலைக டோறுங்
கொழுநறாக் கனி தானுடைந் தோடு
மங்குன் மட்டொளிர் மாடங்க ணாளும்
வகுக்குமா மக்க நாடெங்க நாடே! - வகுக்குமா மக்க



பொழிப்பு:

(மக்கநாட்டின் மேலாகச் செல்லவேண்டியிருப்பின்) சந்திரனும், சூரியனும் விலகி ஓடிச் சென்றுவிடும். நாள்தோறும் தேவர்களின் வருகையால் மக்கநாடு சூழப்படும். பொன்நிறமாக பெருமை மிக்க மலையின் உச்சியில் மேகமானது படிந்து மழையைப் பொழியும். வாசனை பரவுகின்ற சோலைகள் எங்கும் வளமான இனிய பலாக் கனிகள் முதிர்ச்சியினால் தாமாகவே உடைந்து விழும். மேகத்தினை எட்டக்கூடியதான ஒளிவீசும் மாடங்கள் தினமும் உருவாகுகின்ற பெருமைமிக்க மக்கநாடு, எங்களின் நாடாகும்.

4. “தண்ணறா மலர்ச் சோலை னீழலில்
றங்கே கயஞ்சுற்றித் துளங்கிடும்
பண்ணறாப் பண்ணை தோறுநத் தூர்ந்து
பலன்றருந்திரு முத்தினை யீனுங்
கண்ணறா மனை யெங்கு நாளுங்
கடிமணப் முரசு முழங்கும்
எண்ணறா விறை யோனருள் பொங்குசீ
ரெங்கள் மாமக்க நாடெங்க ணாடே! - எங்கள் மாமக்க

பொழிப்பு:

குளிர்ச்சியான தேன் நிறைந்த சோலைகளின் நிழலினிடத்தே காணப்படும் பொய்கைகள் சூழ விளங்கும் வயல்களில், சங்குகள் நகர்ந்து செல்வம் தரும் முத்துக்களைப் பிறப்பிக்கும். மாந்தர் கண் துஞ்சாது ஆரவாரம் செய்யும் இல்லங்களில் நாள்தோறும் திருமணங்கள் நடைபெறுவதால் முரசுகளின் ஓசையானது முழக்கமிடும். சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட இறைவனின் பேரருள் மிகுந்திருக்கும் சிறப்பினையுடைய திருமக்க நாடு, எங்கள் நாடாகும்.



5. அன்னை தந்தை யிலாத விறையோ
னருளினா லமரோர்க ளிறங்கியே
முன்னைநாள் ககுபத்தை யியற்றி
முழங்கி நாளும் வணங்கிய நாடு
மன்னர் மூசா நபிபொருட் டாலே
வளைந்து மேக மலிந்து குவிந்து
சொன்ன மாரி பொழிந்துயர் காரணஞ்
சொல்லொணா மக்க நாடெங்கள் நாடே! - சொல்லொணா

பொழிப்பு:

தாய் தந்தை இல்லாத ஏகனாகிய இறைவனின் பேரருளினால், வானவர்கள் பூமிக்கு இறங்கி வந்து முன்னைய நாளில் ககுபத்து என்னும் பள்ளிவாசலை அமைத்து, இறைவனின் நாமத்தை முழக்கமிட்டு வழிபட்ட நாடு. மன்னர் மூசாநபிக்காக மேகமானது வளைந்து, மிகுதியாக ஒன்றுதிரண்டு, அவரது விருப்பம் போல பெருமளவில் மழையைப் பொழிந்த மேலான அற்புதச் செயலினை வார்த்தைகளால் கூற முடியாத பெருமை பெற்ற மக்கநாடு, எங்களின் நாடாகும்.

6. “ஆறு லட்சம் தரிய மலக்குக
ளாண்டு தோறினுங் கூண்டங் கிறங்கியே
வீறு பெற்ற விறைதனை வென்றி
விளங்க ஹஜ்சி முழங்கிய நாடு
கூறு மானிடர் சிந்தை துலங்கிக்
குவிந்து நித்தம் வணங்கிய நாடு
தேறு மாமன ஆதம்ஹவ் வாவையுஞ்
சேர்க்கு மாமக்க நாடெங்க நாடே! - சேர்க்கு மாமக்க

பொழிப்பு:

அரியதாக ஆறு இலட்சம் வானவர்கள் ஆண்டுதோறும் கூட்டமாக வந்து இறங்கிப் பெருமை பெற்ற இறைவனை, வெற்றி பெருமிதத்துடன் ஹஜ்சி முழக்கமிட்டு வணங்கிய நாடு. பல்வேறு கூறுகளாகக் காணப்பட்ட மனிதர்கள், தங்கள் உள்ளங்களில் தெளிவு பெற்றுத் திரண்டுவந்து தினமும் இறைவனை வணங்கிய நாடு. தெளிவுடைய பெருமனத்தினராகிய முதல் மனிதன் ஆதம்(அலை) அவனது மனைவி ஹவ்வா ஆகியோரை (பிரிந்திருந்தவரை) ஒன்று சேர்ப்பிக்கும் பெருமைமிக்க மக்க நாடு எங்களின் நாடாகும்.

7. சந்திரன் றரு முத்துஞ் சலஞ்சலத்
தானதி யினீன் றிடு முத்துமோர்
கொந்து லாவிய கன்னற் கணுவிற்
குதித்த முத்தும்வெண் டாமரை முத்துநல்
லந்தமாய் விளை செந்நெலின் முத்து
மலர்ந்த பூதத்தின் முத்து மழகிய
தந்திக் கோடுறு முத்துந் தயங்குந்
தவமுலா மக்க நாடெங்க ணாடே! - தவமுலா மக்க

பொழிப்பு:

சந்திரன் வழங்குகின்ற ஒளிமுத்தும், ஆற்றுநீர் சலசலத்து ஓடும்போது விளைகின்ற மணிமுத்தும், ஓர் கொத்தாகக் காணப்படும் கரும்பின் கணுக்களில் விளைந்த முத்தும், வெள்ளைத் தாமரையில் பிறந்த முத்தும், நன்றாக முற்றி விளைந்த செந்நெல் மணிமுத்தும், அடர்த்தியான காடுகளில் கிடைக்கும் முத்தும், அழகிய யானை தந்தங்களிலிருந்து பெறப்படும் முத்தும் கலந்து ஒளிவிடுகின்ற தவம் நிறைந்த மக்கநாடு எங்களின் நாடாகும்.

8. பாயக் கண்டது மாமலை வெள்ளம்
பணைக்கக் கண்டது செந்நெற் கரும்பு
தேயக் கண்டது புன்குபிர் மார்க்கஞ்
செழிக்கக் கண்டது நந்நபி தீனது
காயக் கண்டது சந்திர காந்தி
கலங்கக் கண்டது காபிர்க ணெஞ்சகந்
தோயக் கண்டது வெண்டயிர் நாளுந்
துளங்கு மாமக்க நாடெங்க ணாடே! - துளங்கு மாமக்க



பொழிப்பு:

(மக்கமாநாட்டில்) பாய்வதற்காகக் காணப்படுவது பெரிய மலையிலிருந்து வழிந்தோடிவரும் வெள்ளமாகும். பருத்துக் காணப்படுபவை செந்நெல்லும், கரும்புமாகும். தேய்ந்து காணப்படுவது இறை நிராகரிப்பாளரின் தீய நெறியாகும். செழித்து வளர்வதாகக் காணப்படுவது தூய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இஸ்லாம் சமய நெறியாகும். காய்வதாகக் காணப்படுவது சந்திரன் ஒளியாகும். கலங்கிக் காணப்படுவது இஸ்லாத்தை ஏற்காத உள்ளமாகும். தோய்வதாகக் காணப்படுவது வெண்ணிறத் தயிராகும் இவ்வாறு தினமும் விளங்கும் மக்கா நாடானது எங்களின் நாடாகும்.

9. காரணஞ் செறி யும்மற பாமலை
காட்சி பெற்ற ஸபாமறு வாமலை
பூரணம் மதி வந்து நபியைப்
புகழ்ந்து போற்றும் அபீக்குபை சூமலை
ஆரணங் கொண்டு வான ரிறங்கி
யருநபிக் கங் களித்தகி றாமலை
சீரணியும் பல மலை சுற்றிய
செய்ய மாமக்க நாடெங்க ணாடே! - செய்யமாமக்க

பொழிப்பு:

அற்புதச் செயல்கள் நிறைந்த மறபா மலை, இறைவனின் அருட்காட்சி பெற்ற ஸபா மறுவா மலை, பூரணச் சந்திரன் வந்து நபி பெருமானைப் புகழ்ந்து போற்றும் அபீக்குபை சூ மலை, வானவர்கள் திருக்குர்ஆன் வேதத்துடன் இறங்கிவந்து நபி நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளிச் செய்த ஹிறாமலை முதலான சிறந்த பல மலைகளால் சூழப்பட்ட அழகிய பெரிய மக்க நாடு, எங்கள் நாடாகும்.

10. ஆதி யேவலி னாலிபுறா கிமும்
அருமை யார்மக வாமிசு மாயிலைப்
பேதி யாதுகொண் டேகிக் கழுத்தைப்
பிடித் திழுத்தங் கறுத்திடும் வேளையில்
நீதியா யவர் கந்தரந் தன்னையே
நீக்கியே குறு பானுக் கயமருள்
சோதி நாயகன் றன்குத றத்துறல்
சொல்லொணா மக்க நாடெங்கள் நாடே! - சொல்லொணா மக்க

பொழிப்பு:

கனவில் வந்து இறைவனிட்ட கட்டளைப்படி இப்ராஹிமும் தமது அருமை மகவாகிய இஸ்மாயிலை உயிர்ப்பலி கொடுப்பதற்குக் கொண்டுபோய், அவரது கழுத்தினைப் பிடித்து அங்கு அறுத்து பலியிட முயன்ற தருணத்தில், நீதியின் செயலதுவாய் கத்தி வெட்டாது உயர்ந்து நின்று அவரது கழுத்தினை விடுவித்து, அதற்கு பதிலாக ஆட்டின் இறைச்சியைக் கொண்டு விருந்து படைக்குமாறு பெருமையுடன் அருளிய ஒளி பொருந்திய தலைவரின் வல்லமை மிக்க செயலினைச் சொற்களால் கூற முடியாத பெருமை மிக்க மக்க நாடு எங்களின் நாடாகும்.



11. கத்த னாதி யருள்கலந் தார்கசு
றில்லசு வதுக் கல்லுங் ககுபத்து
மெத்த வேநவ முற்றழ காகிய
மேன்மை சேருஞ் சமுசமும் வானவர்
சுற்று காரணஞ் சேர்ந்த தலங்களுஞ்
சூழு மன்னர்கள் மாடமு நீடிய
முத்தி னாலொளி பெற்றிறை முன்செல்
முகம்மதாள் மக்க நாடெங்க ணாடே!

பொழிப்பு:

மூல முதல்வனாகிய இறைவனின் அருளானது கலந்துள்ள ‘‘ஹஜறுல் அஸ்வத்’’ எனும் புனிதக் கல்லும், ககுபத்தாகிய பள்ளி வாசலானது மிகவும் புதுமையாய் அழகும், சிறப்பும் பெற்று விளங்கும் படியான ‘‘ஸம் ஸம்’’ என்னும் நீரூற்றும், தேவர்கள் கூட்டமாய் வந்திறங்கி அற்புதச் செயல்கள் புரிவதற்குரிய இடங்களும், முத்துக்கள் பிரகாசிக்கின்ற நிலைபெற்ற அரசர்களின் மாடமாளிகைகளும் சூழ்ந்திருக்கும், அல்லாஹ்வாகிய, இறைவனின் முன்னிலையில் செல்லத்தக்க முகமது நபி (ஸல்) அவர்கள் புனித ஆட்சி செய்கின்றதுமான திருமக்க நாடு, எங்களின் நாடாகும்.

சேய்குத்தம்பி புலவர் இயற்றிய இசைநாடகமான காரணமாலை நூலின் ‘‘திருமக்க நாட்டுச் சிறப்பு’’ப் பகுதியிலுள்ள 15 பாடல்களில் மூன்றாவது பாடலையும், இறுதியிலுள்ள மூன்று பாடல்களையும் தவிர்த்துப் பதினொரு பாடல்கள் பாடப்பரப்பிற்கு உரியனவாய் அமைந்துள்ளன. பாடப்பரப்புக்குரிய முதலாம் பாடல் அறுசீரடி ஆசிரிய விருத்தத்தாலும், இரண்டாம் பாடல் எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தினாலும், ஏனைய ஒன்பது பாடல்களும் கொச்சகக் கலிப்பா வினாலும் ஆக்கப்பட்டுள்ளன. பதினொரு பாடல்கள் பொதுவாகத் திருமக்க நாட்டின் சிறப்பினையே கூறுகின்றன. ஆயினும் முதலிரு பாடல்களும் மக்க நாட்டின் இயற்கை எழில் பற்றிக் கூற, ஏனையவை மக்க நாட்டின் வளத்தையும், அருட் சிறப்பையும் வருணித்துள்ளது.

மக்க நாட்டின் இயற்கையழகும் வளமும் பற்றிக் காரணமாலை கூறுவன:

- கரிய முகில்கள் தவழுஞ் சோலை நீழலில் மயில்கள் ஆடும்.
- நதி ஓடுகின்ற இடங்களில் சங்குகள் முத்துக்களை ஈனும்.
- அழகு நிறைந்த வயல்களெங்கும் சிவந்த வண்டினங்கள் ரீங்காரமிடும்.
- மலைகள் நிறைந்ததாய் மக்கநாடு காணப்படும்.
- மலைகளில் நறுவாசனை வீசும்.
- மனைகளிலுள்ள பெண்கள் தம் கூந்தலுக்கு இடும். நறுமணப் புகையானது வானத்தில் ரெண்டு மேகம்போல் காட்சி தருவதைக் கண்டு, அதை மழை மேகம் என நினைத்த சோலை மயில்கள் மகிழ்ச்சியால் ஆடும்.
- தாமரை மலர்கள் நிறைந்த தடாகங்களால் வயல்களில் சங்குகள் முத்துக்களை ஈனும்.
- பொன்போன்ற மலை உச்சியின் மீது வானமானது மழையை பொழியும்.
- வாசனை பரவும் சோலைகள் தோறும் பலாக்கனி தானாகவே உடைந்து சிந்தும்.
- சந்திரனின் ஒளி முத்து, ஆற்று நீர் தரும் முத்து, கரும்பின் கணுகளில் தோன்றும் முத்து, வெண்டாமரை முத்து, செந்நெல் முத்து, காட்டிற் கிடைக்கும் முத்து, யானைத் தந்தத்திற் கிடைக்கும் முத்து ஆகியன நிறைந்த நாடு.
- பாய்வது வெள்ளமாகவும், பருப்பது செந்நெல்லும் கரும்புமாகவும், காய்வது சந்திரன் ஒளியாகவும், தோய்வது வெண் தயிராகவும் விளங்கும் நாடு.
- வீடுகளில் நாள்தோறும் கடிமண முரசுகளின் ஓசை கேட்கும் நாடு
- வானளாவிய மாடங்கள் தினமும் உருவாகும் நாடு.

மக்க நாட்டின் அருட் சிறப்புப் பற்றிக் காரணமாலையின் திருமக்க நாட்டுச் சிறப்புப் பகுதியில் கூறப்படுபவை:

- ✓ எண்ணறா இறையோன் அருள் பொங்கும் நாடு.
- ✓ வானவர்கள் இறையருளால் தினமும் வந்து கூடும் அதிக தவமுடைய நாடு.
- ✓ சந்திரனும் சூரியனும் மேலாகச் செல்லவேண்டியிருப்பின் விலகி ஓடும் பெருமைமிக்க நாடு.
- ✓ தாய், தந்தை இல்லாத ஏகனாகிய இறைவனின் பேரருளினால் வானவர்கள் பூமிக்கு இறங்கிவந்து ககுபத்தாகிய புனித பள்ளிவாசலை உருவாக்கிய நாடு.
- ✓ வானவர்கள் க.ஃபாவில் தினமும் இறைவனின் திருநாமத்தை முழக்கஞ்செய்து வழிபாடு இயற்றும் நாடு
- ✓ மனனர் மூசாநபி அவர்களின் வேண்டுகோளுக்காக மேகமானது மழையைப் பொழிந்த அற்புதச் செயல் நிறைந்த நாடு.
- ✓ அரியதாக ஆறு லட்சம் வானவர்கள் கூட்டமாய் வந்திறங்கி இறை நாமத்தை முழக்கமிட்டு (ஹஜ்) வணங்கிய நாடு
- ✓ பல்வேறு பிரிவுகளாக வேறுபட்டிருந்த மானிடர்கள், தமது சிந்தையில் தெளிவு பெற்று, திரண்டு வந்து ககுபத்தை வணங்கிய நாடு.
- ✓ முதல் மனிதனாகிய ஆதம் (அலை), அவரது மனைவி ஹவ்வா ஆகியோரை ஒன்றிணைத்த பெருமைக்குரிய நாடு.
- ✓ அல்லாஹ்வை நிராகரிப்பவர்களின் நெஞ்சங்கள் கலங்குவதான நாடு.
- ✓ அற்புதச் செயல்கள் நிகழ்ந்த மறபா மலை, இறைக் காட்சி பெற்ற ஸபா மறுவா மலை, பூரணச் சந்திரன் வந்து நபியைப் புகழ்ந்து போற்றிய அபீக்குபை சூ மலை, திருக்குர்ஆன் வேதத்தினைக் கொண்டு வானவர்கள் இறங்கிவந்து நபிபெருமானுக்கு அருளிச் செய்த ஹிறாமலை முதலான சிறப்புடைய பல மலைகளால் சூழப்பட்ட நாடு.
- ✓ இறைவன் கனவில் வந்து இட்ட கட்டளைப்படி இப்ராஹிம், தம்முடைய அருமை மகவான இஸ்மாயிலைக் கொண்டு போய் ககுபத்தில் கழுத்தை அறுத்து உயிர்ப்பலி கொடுக்க முயலும் வேளையில் இறைவனின் நீதியின்படி அவரது கழுத்தை விடுவித்து, ஆட்டு இறைச்சியால் விருந்து படைக்குமாறு (குறுபான்) அருளிய ஒளி பொருந்திய நபி பெருமானின் அற்புதம் நிகழ்ந்த நாடு.
- ✓ மூல இறைவனின் அருள் கலந்த "ஹஜறுல் அஸ்வத்" என்னும் புனிதக் கல்லையும், ககுபத்தை அழகும், புதுமையும் நிறைந்து விளங்கும்படி செய்யும் "ஸம்ஸம்" நீரூற்றையும் கொண்ட நாடு. (இப்ராஹிம் (அலை) அவர்களை இறைவன் சோதிப்பதற்காக அவரது மனைவி ஹாஜராவையும் மகனார் இஸ்மாயிலையும் மலையடிவாரத்தில் கொண்டுபோய் விடும்படி கட்டளையிட, அதன்படியே மழலையைக் கையிலேந் தியபடி ஹாஜராவும் விடப்பட்டார். தண்ணீர்த் தாகத்தினால் தவித்த குழந்தைக்குத் தண்ணீர்தேடிப் பாலைவனக் குன்றுகளிடையே ஓடிய தாயார் குழந்தை கால்களால் நிலத்தில் உதைத்த இடத்திலிருந்து நீரூற்றுக் கிளம்புவதைக் கண்டு "நில்! நில்" என கூவினார். அந்தப் புனித நீரூற்றே இதுவாகும்)
- ✓ முத்தொளி வீசும் அரச மாடங்களும், தேவர்கள் வந்து அற்புதம் விளைவிக்கும் தலங்களும் சூழ்ந்த நாடு.

- ✓ இறைவன் முன்னிலைப்படுதற்குரிய முகம்மது முகம்மது நபி (ஸல்) அவர்களால் ஆளப்படும் சிறப்புடைய நாடு.

திருமக்க நாட்டுச் சிறப்பு எனும் பகுதியிற் காணப்படும் அணி சிறப்புகள்:

- ✓ "மின்னனார்கள்" - உவமையணி
- ✓ பெண்கள் கூந்தலுக்கு இடும் தூபப்புகை வானத்தை அடைந்து மேகம் போல் விளங்கக் கண்ட சோலை மயில்கள் ஆடுதல் - உயர்வு நவிற்சியணி
- ✓ மங்குல் மட்டொளிர் மாடங்கள் - உயர்வு நவிற்சியணி

காரணமாலை நூலாசிரியரின் உத்திமுறைகள்:

- ❖ இசை நாடகமாக உருவாக்கியித்தல்.
- ❖ எளிமையான மொழிநடையைப் பிரயோகித்திருத்தல்.
- ❖ இஸ்லாமியப் பண்பாட்டையும், இஸ்லாமிய சமய வரலாற்றையும் இசைப் பாடல்களூடாக எடுத்துகாட்டியிருத்தல்.
- ❖ தமிழ்ப் பண்பாட்டைத் தழுவி அரபு நாட்டுக் கதையைக் கூறியிருத்தல்.
- ❖ வருணனைகளை நயமுடன் இணைத்திருத்தல்.
- ❖ இஸ்லாமிய சமயம் சார்ந்த அரபுச் சொற்கள் பலவற்றைப் பயன்படுத்தியிருத்தல்.
- ❖ இறையுணர்வு மீதூரப் பாடல்களில் உணர்ச்சி செறிவை வெளிப்படுத்தியிருத்தல்.

காரணமாலை பகுதியில் வினாவப்படக்கூடிய மாதிரி வினாக்கள்

01. இந் நூல் எந்த நூலின் தழுவலாக எழுந்து?
02. காரணமாலை எனப் இந் நூலுக்குப் பெயர்வரக் காரணம் யாது?
03. காரணமாலை நூல்பற்றி சிறுகுறிப்பு வரைக.
04. இந்நூலாசிரியர் பற்றிக் கூறுக.
05. காரணமாலை பகுதியினூடாக வெளிப்படும் மக்க நாட்டின் இயற்கையழகு, வளம் பற்றிக் குறிப்பிடுக.
06. காரணமாலையில் வெளிப்படும் மக்க நாட்டின் அருட்சிறப்புப் பற்றிக் கூறுக.
07. காரணமாலையின் திருமக்க நாட்டின் சிறப்பு பகுதியில் கையாளப்பட்டுள்ள அணிகளை குறிப்பிட்டு விளக்குக.
08. காரணமாலையின் திருமக்க நாட்டின் சிறப்பு பகுதியில் ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடைச் சிறப்பம்சங்களை குறிப்பிட்டு விளக்குக.
09. பின்வரும் சொற்களுக்குரிய பொருளைப பாடப்பரப்பிலிருந்து கண்டறிக.
    1. வளை……..
    2. தரளம் ……
    3. பணை…….
    4. செய்ய…….
    5. மரு……..
    6. மன்றல் ……...
    7. வயின் …….
    8. முண்டகம் ……...

9. தடம் .....
10. மால் .....
11. எழிலி.....
12. கொங்கு.....
13. கொழு.....
14. நறாக்கனி.....
15. மங்குல் .....
16. நத்து.....
17. ஓதை.....
18. ககுபத் .....
19. சொன்னமாரி.....
20. காரணம் .....
21. மலக்குகள் .....
22. ஹஜ்சி.....
23. தேறு.....
24. கொந்து.....
25. பூதம் .....
26. தவம்உலா.....
27. பணைக்க.....
28. புன் .....
29. குபிர் .....
30. தீன் .....
31. காந்தி.....
32. காபிர்கள் .....
33. ஆரணம் .....
34. கந்தரம் .....
35. குறுபான் .....
36. கயம் .....
37. குதறத்துறல் .....
38. கத்தன் .....
39. கசுறில்லசுவது.....
40. சமுசம் .....